*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *சங்கீதம் 71*
# தேவனின் வழியை அறிந்துகொள்ளுதல்

***சங்கீதம் 71:1-24, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான்***
***ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.***
***2. உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக்***
***காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை***
***இரட்சியும். 3. நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக்***
***கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக்***
***கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என்***
***கோட்டையுமாய் இருக்கிறீர். 4. என் தேவனே,***
***துன்மார்க்கனுடைய கைக்கும், நியாயக்கேடும் கொடுமையு***
***முள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.***
***5. கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என்***
***சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர். 6. நான்***
***கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்;***
***என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே;***
***உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன். 7. அநேகருக்கு***
***நான் ஒரு புதுமை போலானேன்; நீரோ எனக்குப் பலத்த***
***அடைக்கலமாயிருக்கிறீர்.8. என் வாய் உமது துதியினாலும்,***
***நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.***
***9. முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன்***
***ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும். 10. என்***
***சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி, என்***
***ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய்***
***ஆலோசனைபண்ணி: 11. தேவன் அவனைக் கைவிட்டார்,***
***அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்; அவனை விடுவிப்பார்***

*இல்லை என்கிறார்கள். 12. தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்; என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும். 13. என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும், எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவுங்கடவர்கள்.14. நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன் மேலும் உம்மைத் துதிப்பேன். 15. என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்; அவைகளின் தொகையை நான் அறியேன். 16. கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டு வேன். 17. தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன். 18. இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக. 19. தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்? 20. அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். 21. என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர். 22. என் தேவனே, நான் வீணையைக்கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப் பாடுவேன். 23. நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும். 24. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.*

*துரதிர்ஷ்டவசமாக, நமது கலாச்சாரமும் சமூகமும் ஒரு சுயநல சமூகம்.*

*இளைய தலைமுறையினர் பெரும்பாலும் வயதானவர்களை ஒரு சுமையாகவும், பெரியவர்களுக்கு நம் கவனிப்பு தேவைப்படும்போது, தங்கள் இன்பத்திலும் வெற்றியைப் பெறுவதிலும் குறுக்கிடுவதாக இளையோர் கருதுகின்றனர்.*

*71-ஆம் சங்கீதம் ஒரு முதியவரின் சங்கீதம். அவர் பல சோதனைகளையும் சிக்கல்களையும் கண்ட முதியவர், ஆனாலும் அவர் ஒரு மனரம்மியமான மனிதர், இந்த சோதனைகளுக்கு மத்தியிலும் கர்த்தர் மீது அவரால் கவனம் செலுத்த முடிகிறது.*

*தனது சிறு வயதிலிருந்தே விசுவாசத்தை வளர்த்துக் கொண்ட ஒரு மனிதனின் ஜெபத்தையும் ஆராதனையையும் நாம் இந்த சங்கீதத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறோம்,*


*இப்போது வயதான காலத்தில் தனது வாழ்க்கையில் ஒரு நெருக்கடியை எதிர்கொள்ளும்போது அந்த நம்பிக்கையை மீண்டும் உறுதியாக பற்றிக்கொண்டுள்ளார்.*

*தன் காலத்தில் மீண்டும் மீண்டும் தேவன் உண்மையானவர் அன்பானவர் என்பதை அடிக்கடி கண்ட மனிதர் இவர்.*
***அதன் விளைவு என்ன?***

*அவர் பாதை எளிதானய் இல்லை.*
*தேவனுடன் சஞ்சரித்தபோதும் அந்த வாழ்க்கை எளிதாக இல்லை.*

*மாறாக, அவர் இந்த வயதிலும் இன்னுமொரு கடினமான நெருக்கடியை எதிர்கொள்கிறார். அது அவர் கழுத்தை சுற்றி*

*இருக்கும் மற்றொரு எதிரிகளின் கூட்டம். எனவே அவர் மீண்டும் தேவனிடம் திரும்புகிறார்!*



*இந்த வயதான காலத்தில் இந்த சங்கீதக்காரன் தனது பிரச்சினைகளை நன்றாகக் கையாள்வதற்கு காரணம், அவர் இந்நாள்வரைக்கும் தேவனோடு சஞ்சரித்தது தான். தேவனோடு இசைந்து வாழ்ந்ததினாலேயே இந்த திறனை அவரால் வளர்த்துக்கொள்ள முடிந்தது.*

*கர்த்தர் தனக்கு நிச்சயமான ஆதாரம் என்று அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். இது அவரது உடல் பலவீனத்தையும் எதிரிகளின் வல்லமையையும் தாண்டி, அவருடைய உள்ளத்தில் பெரும் பெலனை கொடுத்தது.*

*71-ஆம் சங்கீதத்தை எழுதியவர் யார் என்பது நமக்கு தெரியாது.*

*சில அறிஞர்கள் அது எரேமியா தீர்க்கதரிசி என்று நினைக்கிறார்கள்.*

*ஆனால், அப்சலோமின் கிளர்ச்சியின் போது தாவீது ராஜா இந்த சங்கீதத்தை எழுதினார் என்று நினைப்பவர்களுடன் நான் உடன்படுகிறேன். ஒருவேளை அவர் யோர்தனில் அருகே இருந்திருக்கலாம். போர் எப்போது முடியும் என காத்திருந்திருக்கலாம்.*

*இந்த சங்கீதம் மற்ற தாவீதின் சங்கீதங்களிலிருந்து பல கூறுகளை ஒன்றாக இணைக்கிறது (**சங்கீதம் 22, 31, 35, 40, 109**).*

*வீணையும் சுரமண்டலமும் தேவனை துதிப்பதற்கு இந்த சங்கீதத்தில் குறிப்பிடப்படிருப்பது தாவீது ராஜாவின் வார்த்தைகள் போல் தெரிகிறது.*

*தனது மேன்மையை பெருகப்பண்ணி மீண்டும் உயிர்ப்பிப்பீர் என்கிற வாசகம் தாவீது ராஜா மீண்டும் சிங்காசனத்தில் அமருவதைப்பற்றிய குறிபாக இருக்கலாம்.*

*இந்த சங்கீதக்காரனின் சூழ்நிலை தாவீது ராஜாவிற்கும் அப்சலோமிற்கும் ஏற்பட்ட பிரச்சனையின் சூழ்நிலைக்கு மிக பொருத்தமாக இருப்பதை நாம் காணலாம்.*

***சங்கீதம் 71:1**, அவமானம்,*
***சங்கீதம் 71:4,** பகைவர்களால் ஒடுக்கப்படுதல்,*
***சங்கீதம் 71:10,11,13, &24,** எதிரிகள் அவருக்கு எதிராக பேசி, அவரைக் கொல்ல முற்படுகிறார்கள்.*
***சங்கீதம் 71:7 &20,** அனேக துன்பம் நிறைந்த வாழ்க்கை.*
***சங்கீதம் 71:5, &7,** இள வயதிலிருந்தே தேவன் மீது நம்பிக்கை.*
***சங்கீதம் 71:9 &18,** இப்போது அவர் வயது சென்று பலவீனமானார்.*

*அப்சலோமின் பிரச்சனை வந்த போது, தாவீது தனது 60களின் முற்பகுதியில் இருந்தார், அவர் தனது 70 வயதில் இறந்தார்.*

*எது எப்படியோ, தேவனுடன் அவர் சஞ்சரித்த சந்தர்ப்பங்களால் பல ஆண்டுகளாக அவர் பக்குவப்பட்டதினிமித்தம், இந்த வயதான காலத்தில் சோதனையை எதிர்கொள்ள மிகுந்த தைரியத்தோடும் ஸ்திரத்தோடும் தேவனோடு நிற்க அவரால் முடிகிறது.*

*நம்முடைய சோதனைகளின் மத்தியிலும் தேவனோடு நாமும் இப்படிப்பட்ட குணாதிசயங்களை வளர்த்துக்கொள்ள இந்த சங்கீதத்திலிருந்து இன்று நாம் கற்றுக்கொள்வோம்!*

## *1. தேவனை பற்றிய ஆழமான அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.*

*கர்த்தராகிய தேவனை பற்றிய ஆழ்ந்த தனிப்பட்ட புரிதலும் நடைமுறை அறிவும் இந்த சங்கீதம் முழுதும் நிரம்பி வழிகிறது.*

*அவர் சிறுவயதிலிருந்தே தேவனால் கற்பிக்கப்பட்டார்.*
***சங்கீதம்** 71:17, **தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.***

*இவர் தேவனை தன் அடைக்கலமாக அறிந்திருந்தார்.*
***சங்கீதம்** 71:1, **கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்**.*

*தேவனே அவருக்கு பலத்த அடைக்கலம்.*
***சங்கீதம்** 71:7, **அநேகருக்கு நான் ஒரு புதுமை போலானேன்; நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்**.*

*தேவனே நீதியின் இரட்சகர்.*
***சங்கீதம்** 71:2, **உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.***

*தேவனின் நீதி அடிக்கடி குறிப்பிடப்படுகிறது.*

***V 2, உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.***

***V 15, என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்; அவைகளின் தொகையை நான் அறியேன்.***

***V 16, கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.***

***V 19 தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?***

***V 24, எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.***

*தேவன் தமது ஜனத்திற்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற உண்மையுள்ளவர் என்று சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார்.*

*அவர் தேவனை தான் வாசம்பண்ணும் கன்மலை, மற்றும் கோட்டை, அவரது நம்பிக்கை என்று அழைக்கிறார்.*

***V 3, நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.***

*V 5,* ***கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.***

*தேவனின் மகத்தான கிரியைகளை பற்றி பேசுகிறார்.*
*V 16,* ***கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.***

*தேவனின் வல்லமையும் பராக்கிரமும்.*
*V 18,* ***இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக.***

*அவர் செய்த பெரிய காரியங்கள்.*
*V 19,* ***தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?***

*தன்னை இந்த நெருக்கத்தில் தேவனே அழைத்து வந்தார். அவரே தன்னை விடுவித்து மீட்டெடுப்பார் என்று அவர் உணர்ந்தார்.*
*V 20,* ***அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.***

*இந்த சோதனையில் தேவன் அவருக்கு ஆறுதலளித்தார்.*
*V 21,* ***என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்.***

*தேவன் அவருடைய ஆத்துமாவை மீட்டுக்கொண்டார்.*
***V 23, நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.***

*நாள் முழுவதும் தனது நாவு தேவனின் புகழையும் மகிமையையும் நீதியையும் பாடும் பாடலால் நிரம்பியதற்கு தானே சாட்சியளிக்கிறார்.*
*V 8,* ***என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.***

*V 22,* ***என் தேவனே, நான் வீணையைக்கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக்கொண்டு உம்மைப் பாடுவேன்.***

***V 23, நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.***

*V 24,* ***எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.***

*இறுதியாக,* ***தேவனே, உமக்கு நிகரானவர் யார்?*** *என்று ஆச்சரியப்படுகிறார்.*

***V 19, தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?***

*இந்த மனிதன் தன் தேவனை அறிந்திருந்தார்!*

*அவர் பல ஆண்டுகளாக தேவனை அறிந்திருந்தார் என்பதும், முந்தைய பல கடினமான சூழ்நிலைகளில் தேவன்*

*உண்மையுள்ளவர் என்று நிரூபித்ததும் தெளிவாகத் தெரிகிறது.*

*எனவே, இப்படிப்பட்ட நெருக்கடியில் போகும்போது, "தேவனே, நீர் இருந்தீரானால் எனக்கு உதவும்'' என்று கூறி கண்மூடித்தனமாக விசுவாசிக்க அவசியமில்லை. ஏனெனில், இந்த சங்கீதக்காரன் தேவனை தனிப்பட்ட முறையில் நன்றாகவே அறிந்திருந்தார்.*

*கண்மூடித்தனமாக அல்ல, தேவனை நன்றாய் அறிந்து, கர்த்தர் மாறாத உண்மையுள்ளவர் என்று நிச்சயமாய் அறிந்ததாலேயே இந்த மனிதன் கர்த்தரை விசுவாசிக்கிறார்.*




***நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா:***

***நீங்கள் இப்படி நிச்சயமாய் தேவனை அறிந்திருக்கிறீர்களா?***
***கர்த்தருடைய வார்த்தையிலும், அவர் வார்த்தையை உங்கள் வாழ்க்கையில் வாழ்வதாலும் அப்படிப்பட்ட அறிவை வளர்த்துக்கொள்கிறீர்களா?***




*எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய எந்த நெருக்கடிகளுக்கும் தயாராவதற்கு நாம் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று, தேவனின் வார்த்தையில் இப்போது நேரத்தை செலவிடுவதன்மூலம் தேவனை அறிந்து கொள்வது.*

***அவருடைய வார்த்தையைப் தியானிக்கும்போது உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:***

***இந்த வசனம் என் தேவனை பற்றி எனக்கு என்ன கற்பிக்கிறது?*** *உங்கள் அன்றாட பிரச்சினைகளுக்கு இதைப் பயன்படுத்த முயலுங்கள்.*

*இரண்டு இளம்பெண்கள் பீதியுடன் தங்கள் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தனர். அவர்களுக்குப் பின்னால் கதவைத் திறந்து புகை வந்தது. அடுப்பில் ஒரு கிரீஸ் தீ இருப்பதையும், அவர்களது பெற்றோர் வீட்டில் இல்லை என்பதையும் பக்கத்து வீட்டுக்காரர் கண்டுபிடித்தார். அவர் சமையலறைக்குள் ஓடினார். அந்த சிறுமிகளிடம் தீயை அணைக்கும் கருவி இருக்க வாய்ப்பில்லை, அல்லது அதை அவர்கள் ஏற்கனவே பயன்படுத்தியிருப்பார்கள் என்று கருதினார், எனவே அவர் நெருப்பை மற்ற வழிகளில் அணைக்க முயன்றார். அது பலனளிக்கவில்லை.*

*இறுதியில் தன்னால் முடியாதபோது அவர்களைப்பார்த்து கேட்டார் "**உங்களிடம் தீ அணைப்பு கருவி இருக்கிறதா?**"*

*அங்கு மூன்று தீ அணைப்பு கருவி இருகிறது என்று சிறுமியர் அறிவித்தனர்! சிறுமியாரில் ஒருவர் அவருக்கு ஒரு கருவியை கொடுத்தார். அதைக்கொண்டு அந்த பக்கத்து வீட்டுக்காரர் நொடிகளில் தீயை அணைத்தார்.*

*தீயணைப்பு கருவி அந்த நெருக்கடிக்கு போதுமான ஆதாரமாக இருந்தது, ஆனால் சிறுமிகளுக்கு அதை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியவில்லை அல்லது அதைப் பயன்படுத்துவதில் எந்த அனுபவமும் இல்லை, எனவே அது அவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.*

*அவசரகாலத்தில் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அவர்கள் அறிந்து கொண்டிருக்க வேண்டும்.*

*அவர்கள் அதை பயன்படுத்த தெரியாதபோது அது இருந்து என்ன பயன்?*

*அதேபோல், நம்முடைய தேவனையும், அவருடைய மகத்துவத்தையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதனால் அவருடைய பிள்ளைகளாகிய நமக்குச் சொந்தமான மிகப்பெரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.*

*இப்போது நாம் அதைக் கற்றுக்கொண்டால், முதுமையின் நெருக்கடிகள் நம்மீது வரும்போது அவரை நம்முடைய நம்பிக்கையாக அறிவோம்.*

## *2. Learn to trust God தேவனை விசுவாசிக்க கற்றுக்கொள்ளுங்கள்.*

*ஒரு காரியத்தை அடிக்கடி மீண்டும் மீண்டும் செய்யும்போது நமக்கு அதுவே ஒரு பழக்கமாக (habit) மாறிவிடுகிறது.*

*அது பழக்கமாக அமைந்தவுடன், அந்த காரியத்தை இயற்கையாக (involuntary) செய்ய முடிவதை நம்மால் காணமுடிகிறது.*

*வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு நாம் மனரீதியாகவும் உணர்ச்சிகரமாகவும் எவ்வாறு அணுகுகிறோம் என்பதே நமக்கு ஒரு பழக்கமாக மாறுகின்றது.*

- *சிலர் வழக்கமாக கவலை படுவார்கள்.*
- *சிலர் வழக்கமாக குறை கூறுபவர்களாக இருக்கிறார்கள்.*
- *சிலர் வழக்கமாக நெகடிவாகவும், அவநம்பிக்கையாகவும், கோபமாகவும் பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்.*

*வேறு சிலர் வழக்கமாக மகிழ்ச்சியாகவும் பாசிடிவாகவும் சிந்திக்கிறார்கள். நம் இளைய வயதில் நாம் கற்றுக்கொள்ளும் பழக்கங்கள், நாம் வயதாகும்போது அதே திசையில் நம்மை மேலும் அழைத்துச் செல்கின்றன.*

*'தமியித்' **'tamiyd'** என்கிற எபிரேய பதம் 3, 6, மற்றும் 14 வசனங்களில் "எப்பொழுதும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*சங்கீதக்காரன் எப்பொழுதும் உருவாக்கிய பழக்கவழக்கங்களை இது நமக்குக் காட்டுகிறது.*
*அவை பழக்கவழக்கங்கள் அல்ல, அவற்றை நாம் இயற்கையாகவே பயன்படுத்துகிறோம்.*

*அவை கண்டிப்பக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.*
***V 14, நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.***

*உண்மையில், இவை தேவனைக் குறித்த அறிவிலிருந்து உருவாகின்றன. இவை விசுவாசத்தினால் உண்டாகும் பழக்கவழக்கம்.*

***சங்கீதம் 71:3, நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.***

*முழு சங்கீதமும் சங்கீதக்காரன் கர்த்தர் மீது வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகும்.*

*அவர் கடினமான சூழ்நிலையில் இருந்ததால் சிரமப்பட்டார், பலர் அவரது உயிரை பறிக்க நினைத்தனர். ஆனால் தான் யாரை நம்புகிறோம் என்பதை அறிந்திருந்ததால் அவர் தனது விசுவாசத்தில் அசையவில்லை.*

*இத்தகைய நம்பிக்கை தேவனை பற்றிய அறிவிலிருந்து உருவாகிறது.*

*தேவனைக்குறித்த உண்மையான அறிவு நமது சந்தேகங்களையும் பயத்தையும் நீக்குகிறது.*

*நமக்குத் தெரியாததை பற்றி நாம் அஞ்சுகிறோம், அவநம்பிக்கை கொள்கிறோம், அதேசமயம் நமக்குத் தெரிந்ததை விரும்பி நம்புகிறோம், அது நம்பகமானது என்று கருதுகிறோம்.*

***புயல் அல்லது அதிக அலைகள் இருக்கும்போது மீன்பிடிக்க படகில் பயணம் செய்த அனுபவம் உண்டா?***

*நான் ராமேஸ்வரத்தில் சிறு வயதில் ஒரு பயணம் மேற்கொண்டோம். இது மிகவும் சரக்குப் போக்குவரத்து கொண்ட இடம். நாங்கள் கவிழ்ந்து மூழ்கி விடுவோம் என்று நான் பயந்தேன். ஆனால் எங்களோடு இருந்த மீன் பிடிப்பவரோ, நிர்விசாரமாக இல்லாவிட்டாலும், பயப்படவில்லை. இதுபோன்ற பிற புயல்கள் வழியாக அவர் இந்த மீன்பிடி படகில் சென்றிருந்தார், அதை எப்படி கையாள முடியும் என்பது அவருக்குத் தெரியும். அவரது அறிவு அவரது பயத்தை அகற்றியது.*

*சங்கீதக்காரன் தேவனை அறிந்திருந்ததால், முன்னர் தான் கடந்து சென்ற கடினமான காலங்களில் தேவனை விசுவாசிக்க கற்றுக்கொண்டார்.*

***V 20, அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.***

*ஆகையால், தேவன் இந்த நேரத்தில் அவரைக் பார்த்துக்கொள்வார் என்று சங்கீதக்காரர் அறிந்திருந்தார்.*

***உங்கள் வாழ்க்கையின் கடினமான காலங்களில் தேவனை விசுவாசிக்கும் பழக்கத்தை நீங்கள் வளர்த்துக் கொள்கிறீர்களா?***

***அல்லது நீங்கள் அடிக்கடி கவலையிலும் சந்தேகத்திலும் பயத்தாலும் நிரம்புகிறீர்களா?***

*உங்களுக்கு விசுவாசிப்பதில் சிக்கல் இருந்தால், தேவனை அறிந்து கொள்வதில் கவனம் செலுத்துங்கள். மேலும், தேவன் உங்களுக்காக ஏற்கனவே செய்ததை மீண்டும் நினைத்துப்பாருங்கள். தேவன் என்ன செய்தார் என்பதற்கு சங்கீதத்தில் மிகுந்த முக்கியத்துவம் உள்ளது.*
***(71:5, 6, 15, 16, 17, 18, 19, 20, 23, 24)****.*

*அது விசுவாசத்தை பலப்படுத்துகிறது!*

***தேவன் உங்கள் வாழ்க்கையை எப்போதாவது பாதுகாத்துள்ளாரா?***

***உங்கள் பாவங்களிலிருந்து அவர் உங்களை இரட்சித்தாரா? அவர் இதுவரை உங்களைத் தாங்கினாரா?***

*உங்கள் தற்போதைய பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் எழும் எந்தவொரு விஷயத்திற்கும் நீங்கள் அவரை நம்பலாம் விசுவாசிக்கலாம்.*

3. ***Learn to Praise God தேவனை துதிக்க கற்றுக்கொள்ளுங்கள்.***

*துதிப்பது இயற்கையான பழக்கம் அல்ல!*

*உங்களில் பலர் இயல்பாக முணுமுணுப்பவராகவும் குறை கூறுபவர்களாகவும் குற்றம் பார்ப்பவர்களாகவும் இருப்பதால் பலருக்கு இந்த துதிக்கும் பழக்கம் இல்லை.*

*ஆனால் நாம் துதிக்கும் மக்களாக இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்!*

*கடினமான காலங்கள் வரும்போது கூட, நாம் அவரைப் துதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

*சங்கீதக்காரன் அந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொண்டான்.*

***V 8,* என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.**

***V 14,* நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.**

***VV 22-24,* என் தேவனே, நான் வீணையைக்கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக்கொண்டு உம்மைப் பாடுவேன். *23.* நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும். *24.* எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.**

***சோதனைகள் வரும்போது தேவனை துதிக்க நாம் எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்?***

***பதில்:*** *தேவனை விசுவாசிக்க கற்றுக்கொள்ளுங்கள்*

*ஏனென்றால், விசுவாசிப்பது தேவனை அறிந்து கொள்வதைப் போலவே, துதிப்பதும் தேவனை விசுவாசிப்பதிலிருந்து உருவாகிறது.*

*மனித வழக்கத்திலும் சரி தெய்வீக காரியத்திலும் சரி, நீங்கள் நம்பாத ஒருவரை துதிக்க உங்களால் முடியாது.*

*நீங்கள் ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவரை நம்பாதபோது, அவரை நீங்கள் உண்மையாகவே புகழ்ந்து பேச மாட்டீர்கள்.*

*தேவனை துதிப்பதிலும் இதே காரியம் தான். ஏதேனும் ஒரு சோதனையை உங்கள் வழியில் வர அனுமதித்ததற்காக தேவனின் நன்மையையும் உண்மையையும் உங்களுக்குள் ஆழமாக சந்தேகித்தால், நீங்கள் அவரை நம்பவில்லை என்றே பொருள்.*

*நீங்கள் அவரை நம்பவில்லை என்றால், நீங்கள் அவரை துதிக்க முடியாது!*

*நீங்கள் ஒரு குறை கூறுபவராகவும் குற்றம் பார்ப்பவராகவும் இருந்து, துதிக்கும் பழக்கத்தை வளர்ப்பதில் சிக்கல் இருந்தால், இரண்டு காரியங்களை பரிந்துரைக்கிறேன்:*

*தேவனை அறிவதிலும் அவருடைய வழிகளை அறிவதிலும் கவனம் செலுத்துங்கள்.*

*இந்த சங்கீதம் தேவனின் நீதியை வலியுறுத்துகிறது (71: 2, 15, 16, 19, 24) ஏனெனில் சங்கீதக்காரர் அநீதியான மனிதர்களின் கைகளில் அநியாயமாக தாம் நடத்தப்படுவோம் என்று அஞ்சினார், மேலும் அவர் விசுவாசித்த தேவனின் நீதியை பற்றிக்கொள்ள விரும்பினார்.*

*நம் வாழ்வில் கஷ்டங்களையும் துன்பங்களையும் (71:20) தேவன் அனுமதித்தாலும் கூட கர்த்தர் நல்லவர், கர்த்தர் உண்மையுள்ளவர்.*

*தேவன் உங்கள் வாழ்வில் இதுவரை என்ன செய்தார் என்பதை ஒரு நிமிடம் பின்னோக்கி திரும்பி பாருங்கள். அவர் செய்த ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் எண்ணினால் அவை கணக்கில் அடங்காது.*

*அவருடைய பல நன்மைகளை பெற நாம் தகுதியற்றவர்களாய் இருந்தும், அவர் செய்த நன்மைகளை நாம் மறக்க முனைகிறோம், இதனால் நம்மால் துதிக்க முடிவதில்லை.*

### 4. *Patiently Hope*
### *பொறுமையாக நம்பிக்கையோடு இருங்கள்*

*சங்கீதக்காரன் விசுவாசத்தையும் துதியையும் மட்டுமல்லாமல், இவற்றோடு நம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டார்.*

*மதச்சார்பற்ற நம்பிக்கையிலும் (secular hope) வேதத்தில் கூறும் நம்பிக்கையிலும் பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*
*நம்பிக்கையின் இந்த இரண்டு வடிவங்களும் எதிர்கால எதிர்பார்ப்புகளை குறித்தவை தான்.*

*ஆனால் மதச்சார்பற்ற நம்பிக்கை நிச்சயமற்றது, ஏனெனில் அதன் ஆதாரம் நிச்சயமற்றது.*

*வேதத்தின் நம்பிக்கை நிச்சயமானது ஏனெனில் அதன் ஆதாரம் கர்த்தர்.*

***சங்கீதம் 71:5, கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.***

*"எனது முதலீடு 10 சதவிகிதம் சம்பாதிக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று நான் கூறும்போது, நிச்சயமற்ற தன்மை உள்ளது, ஏனெனில் எனது நம்பிக்கையின் பொருள் (பங்குச் சந்தை) நிலையற்றது.*

*ஆனால், "இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாக திரும்புவார் என்று நான் நம்புகிறேன்" என்று நான் கூறும்போது, நான் நிச்சயமான காரியத்தை வெளிப்படுத்துகிறேன், ஆனால் அந்த காரியம் இன்னும் நடைபெறவில்லை. இவ்வாறு, வேதத்தின் நம்பிக்கை தேவன் மீதும் அவருடைய உண்மையுள்ளவர் என்பதன் மீதும் கட்டமைக்கப்பட்டுள்ளது.*

*விசுவாசிகள் தேவனின் வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் கட்டப்பட்ட நம்பிக்கையில் தங்களை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

*அதோனிராம் ஜட்சன் எனும் மாபெரும் ஊழியக்காரர் ஒருமுறை பர்மாவின் சிறையில் காய்ச்சலில் இருக்கும்போது, அவருடைய நண்பர் இப்படியாக ஒரு கடிதத்தை எழுதினாராம். "ஜட்சன், வரும் நாட்கள் எப்படி இருக்கிறது?" என்று. ("Judson, how's the outlook?")*

*அதற்கு ஜட்சன், "வரும் நாட்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் போலவே பிரகாசமாக இருக்கின்றன" என்று பதிலளித்தாராம். ("The outlook is as bright as the promises of God.").*

*துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்கள் உலகில் உள்ளவர்கள் போலவே நெகடிவ் மற்றும் நம்பிக்கையற்ற மனநிலையை உடையவர்களாக இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் தேவனுக்கும் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும் கவனம் செலுத்தாமல் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறார்கள்.*

*நீங்கள் அந்த பழக்கத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், அது வயதாகும்போது அது உங்களை கசப்பான மனிதராக மாற்றிவிடும். தேவ பிள்ளைகள் தேவனை நம்புகிறவர்களாக இருக்க வேண்டும்.*

*இப்படியே, சங்கீதக்காரனும் தனது வயதான காலத்தில் நல்ல நம்பிக்கை கொண்டிருந்தார், ஏனெனில் அவர் தேவனை குறித்த ஆழமான அறிவை வளர்த்துக் கொண்டார். மேலும் அவர் விசுவாசம், துதி மற்றும் நம்பிக்கை முதலிய தெய்வீக பழக்கவழக்கங்களை சிறு வயதுமுதல் வளர்த்துக் கொண்டார்.*

5. ***Developed a lifestyle of ministry for God* தேவனுக்கென்று ஊழியம் செய்யும் வாழ்க்கை முறை.**

*சங்கீதக்காரன் முதிர்வயதானவர்.*
***V 9,* முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.**

***V 18,* இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது**

**பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக.**

*வயதாகிவிட்டது செய்வதெல்லாம் செய்தாகிவிட்டது என்று சொல்லி அவர் ரிட்டையர்-ஆகஇருக்கலாம். ஆனால் அவர் அப்படி ரிட்டையர் ஆகவில்லை.*

*கர்த்தரின் உண்மையையும் வல்லமையையும் மற்றவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்படி அவருக்கு ஊழியத்தில் அக்கறை இருந்தது (71: 8, 15-18, 24).*

*தனக்கு மூச்சு இருக்கும் வரை, தேவனின் மகத்துவத்தையும் மகிமையையும் குறித்து மக்களுக்கு தொடர்ந்து அறிவிக்க விரும்பினார்.*

*இன்றைக்கு சபைக்குள் ஒரு உலக அணுகுமுறை ஊடுருவியுள்ளது, "நான் வாரம் முழுவதும் வேலை செய்கிறேன், எனவே எனது வார இறுதி நாட்களை நான் விரும்பியபடி செலவழிப்பேன், அது எனக்குரிய நேரம்" என்கிறார்கள்.*

*ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்திற்குச் சென்று தேவனுக்கு இரண்டு மணிநேரம் கொடுத்தால், எங்கள் கடமை முடிந்தது என்று நினைக்கிறோம். எந்தவொரு ஊழியத்திலும் மாட்டிக்கொள்ள நாம் விரும்புவதில்லை. ஏனெனில் நாம் வார இறுதி நாட்களில் நம் நிம்மதிக்கு அது தடையாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம்.*

*நீங்கள் என்தாவது ஊழியத்தில் ஈடுபடவில்லை என்றால், நீங்கள் மிகவும் சுயநலவாதிகள்.*

*வாழ்க்கையில் நாம் எல்லா நேரங்களிலும் குடும்பம் மற்றும் வேலையில் பிஸியாக இருக்கிறோம். ஆனால் நீங்கள் தேவாலயத்திற்கு வரும்போதெல்லாம், ''சபையிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும்'' என்றே சிந்தித்துக்கொண்டு, ''சபையின் மூலம் நான் தேவனுக்கு என்ன செய்ய முடியும்'' என்ற சிந்தனை இல்லாமல் இருப்பீர்களானால், நீங்கள் ஏதோ ஒரு இடத்தில் சறுக்குகிறீர்கள் என்றே பொருள்.*

*நம் சரீரத்தில் ஒன்றுமே செய்யாத உறுப்பு என்று எதுவும் இல்லை.*

*சுயநலமாக வாழ நமக்கு ஒருபோதும் உரிமை இல்லை. வாழ்க்கை அனைத்தும் கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் வாழ வேண்டும்.*

*சங்கீதக்காரன் தனது பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு கோல்ஃப் விளையாடவும் மீன்பிடிக்கவும் செல்ல விரும்பவில்லை.*

*அவரோ தேவனின் வல்லமையை அடுத்த தலைமுறைக்கு அறிவிக்க அவர் விரும்பினார் (71:18).*

*இளைய தலைமுறையினரிடம் தனது பொறுப்புகளை ஒப்படைக்கும் தரிசனம் அவருக்கு இருந்தது.*

*தனது ஆயுள் நீட்டிக்கப்படுவதை ஊழியத்திற்கான ஒரு வாய்ப்பாக அவர் கண்டார். அவருடைய ஊழியம் தேவனை குறித்த அறிவிலும், நற் பலக்கவள்ளக்கங்கலான விசுவாசம், துதி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் அஸ்திபாரத்திலும் கட்டப்பட்டது. ஆகவே இளையோருக்கு கற்றுக்கொடுக்கப் பாத்திரமான காரியங்கள் அவருக்கு இருந்தன!*

*தேவனோடு சஞ்சரிப்பதினால் கட்டப்பட்ட ஊழிய வாழ்க்கையை நீங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்களா?*

## *பயன்பாடு:*

### 1. *Take refuge in God*
### *தேவனிடத்தில் தஞ்சம்.*

*இந்த வாழ்க்கையில் நமக்கு நிறைய கஷ்டங்கள் உள்ளன, ஆனாலும் தேவனிடத்தில் மட்டுமே தஞ்சம் அடைவோம்!*

***V 1, "In you, O LORD, do I take refuge."***

*46-ஆம் சங்கீதம் நமக்கு மிகவும் தெளிவுபடுத்துகிறது. ஒவ்வொரு புயலிலிருந்தும் ஒவ்வொரு எதிரிகளிடமிருந்தும் நமக்கு அடைக்கலமாக தேவன் இருக்கிறார்.*

*நீங்கள் தேவனுடைய பாதுகாப்பில் இருப்பதை மறந்துவிட்டால், உங்கள் கஷ்டங்களில் கவனம் செலுத்தத் தொடங்குவீர்கள்.*

*எப்போதும் அவருடைய பிரசன்னத்தில் வாழ்வதை நோக்கமாக கொள்ளுங்கள், உங்கள் சூழ்நிலைகளைப் பற்றி தேவனிடத்தில் முறுமுருப்பதை நிறுத்துங்கள்.*

## 2. *Remember the past walk with God*
## ***தேவனோடு சஞ்சரித்த நாட்களை நினைத்துப் பாருங்கள்.***

*இள வயதிலிருந்தே நீங்கள் தேவன் கொடுத்த ஆயிரமாயிரம் நன்மைகளை நினைத்து வியந்து ஸ்தோத்திரம் செலுத்த தீர்மானம் செய்யுங்கள்.*

*V 5–6, "5.* ***கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர். 6. நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்; என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.*** *"*

*V 17, "****தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.***

*கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை தொடர்ந்து எதிர்காலத்தை நோக்கி கர்த்தருடைய கிருபை ஒவ்வொரு நாளும் நதிபோல பாய்கிறது. அந்த கிருபை அருவியாய் ஒவ்வொரு வினாடியும் நம் வாழ்வில் பொழிகிறது.*

*நாம் பின்னாக திரும்பிப் பார்க்கும்போது, நன்றியுணர்வால் நிரம்ப வேண்டும்.*

*நாம் முன்னாக எதிர்நோக்கும்போது, அந்த நன்றியுணர்வு வலிமையான நம்பிக்கையாக மாற வேண்டும்.*

## 3. *Proclaim God's goodness*
## ***கர்த்தனுடைய நன்மைகளை அறிவியுங்கள்***

*குறை கூறுவதற்கோ அல்லது முறுமுறுப்பதற்கோ நம் வாயில் இடமில்லை, தேவனின் எல்லா மகத்துவங்களையும் பற்றி அதிகமாய் அறிவிக்கத் தீர்மானியுங்கள்.*

***V 6, "உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்."***

***V 14, "மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்."***

*நாம் எவ்வளவு காலம் வாழ்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் துதிக்க வேண்டும்.*

*நம்முடைய பெலன் குறைவதை குறித்து நாம் சிந்தித்து சோர்ந்து போகலாம். ஆனால் தேவ பிள்ளைகளோ, நாளுக்குநாள் அதிகமாய் பிரகாசிப்பார்கள்.*

***ரோமர் 8;18, ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.***

***V 14, "எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்த. . ."***

*நான் பெலவீனன் என்றும் ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவன் என்றும் நீங்கள் நினைத்து விரக்தியடையலாம்.*
*ஆனால் இந்த சங்கீதக்காரனுடைய வார்த்தையை பாருங்கள், "**எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து**."*

***1 பேதுரு 1:13, ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.***

*இயேசு நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார், எப்போதும் ஜெபியுங்கள், சோர்ந்து போகாதிருங்கள் (லூக்கா 18:1).*

***2 கொரிந்தியர் 4:16-18, ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. 17. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாத வைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 18. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப் படாதவைகளோ நித்தியமானவைகள்.***

### 4. *Be a Witness for Christ*
### *கிறிஸ்துவிற்கு சாட்சியாக இருங்கள்.*

*தேவனின் அற்புதமான இரட்சிப்பை காண்போர் யாவரிடத்திலும் அறிவிக்க நாம் புறப்படுவோம்.*

***V 15, என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்; அவைகளின் தொகையை நான் அறியேன்.***

***V 18, "இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும்."***

*கர்த்தருடைய மகத்துவங்களை மற்றொருவரிடம் பகிர்வதைப்போல் வேறு உற்சாகமான காரியம் எதுவுமில்லை.*

5. ***Hope makes you shameless***
   ***தேவ நம்பிக்கை வெட்கமில்லாதவர்களாக மாற்றும்.***

*நம் கற்பனைக்கும் எட்டாத மகத்தான காரியங்கள் தேவனைக் குறித்து உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

*விரைவில் பார்ப்போம்.*

***V 18–19, 18. இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக. 19. தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?***

*எப்போதும் நம் தலைக்கு மேல் ஏதாவது வேளை இருக்கும். நாம் கடவுள் இல்லை. ஆகவே, நாம் தேவனை தேவனாக இருக்கவிடுவோம். நாம் கண்ணார அவரை அறிந்து கொள்ளும் நாளுக்காக பொறுமையாக காத்திருப்போம்.*

*பைத்தியமாய் ஆனதைப்போல தெரிந்தாலும் கர்த்தரில் நமக்கு இருக்கும் நம்பிக்கையைக் குறித்து மகிழ்ச்சியுடன் பாடுங்கள், உரத்த சத்தமிடுங்கள்.*

***V 22–23,* என் தேவனே, நான் வீணையைக்கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக்கொண்டு உம்மைப் பாடுவேன். *23.* நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.**

*பரலோலகத்தில் எந்தவிதமான போலி ஆராதனையும் இருக்காது.*

*உள்ளத்தின் ஆழத்திலிருந்து உண்மையான ஆராதனை மட்டுமே இருக்கும்.*

*உண்மையாகவே குழந்தைகளைப்போல இருப்பது என்றால் என்ன என்பதை பரலோகத்திலே கண்டுபிடிப்போம்.*

*நாம் சுதந்திரமாக விடுவிக்கப்பட்டவர்களாக இருப்போம். சுதந்திரத்திற்கே கிறிஸ்து உங்களை விடுவித்துள்ளார்.*

*இதையே செய்வோம். சோர்ந்து போகாதிருங்கள்.*

***1 தெசலோனிக்கேயர் 5:9-11,* தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். *10.* நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர் களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே. *11.* ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.**